**MCOP:** 24/2024

Date: 17.02.2026.

ம.சா.1 முருகன், த/பெ.செல்லசாமி

**<u>சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

நான் விபத்து நடந்தவுடன் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்குதான் சிகிச்சைக்கு சென்றேன். அதன்பின்பு அற்புதம் மருத்துவமனையில் 2 நாட்கள் சிகிச்சை எடுத்தேன். அற்புதம் மருத்துவமனையிலிருந்து பூரணமாக குணமடைந்துதான் விடுவிக்கப்பட்டேன் என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தனியார் மருத்துவமனையில் 2 நாட்கள்தான் சிகிச்சை பெற்றேன் என்றும் நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.7 ல் உள்ள மருத்துவ செலவுத் தொகையை அதிகப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.11 மருத்துவ பில்லில் ம.சா.ஆ.7 ல் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண்.1 முதல் 8 வரையிலான மருத்துவ பில்கள் குறிப்பிடப்பட்டுள்ளதால் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் சூப்பர்வைசராக வேலை செய்தேன் என்பற்கும் மாத வருமானம் ரூ.25000/– பெற்றேன் என்பதையும் காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது நான் செக்யூரிட்டியாக வேலை செய்து வருகிறேன். நான் தற்போதும் வேலை பார்த்து வருவதால் எனக்கு எந்தவித வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயத்தினால் நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றும் மருத்துவமனையில் வழங்கப்பட்ட ஊன

சதவிகிதம் அதிகப்படியானது என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் சாலை விதிகளை மதிக்காமல் சாலையின் நடுவே நின்றதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு தகுதிச்சான்று 21.09.2021 அன்று முடிவடைந்துவிட்டது என்றும் விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று மற்றும் அனுமதிசீட்டு இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் மோட்டார் வாகன விதிமுறைகளையும் காப்பீட்டு விதிகளையும் மீறி 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் வாகனத்தை சாலையில் ஓட்டிச்சென்றதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. எனக்கு இழப்பீடு கொடுக்க வேண்டியிருந்தால் அதை 1ம் எதிர்மனுதாரர்தான் கொடுக்க வேண்டும் என்றும் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:-**</u> இல்லை

**ஒம்/-R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**